DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.192/2025

PW - 1

| | | |
|---|---|---|
| Name | : | மோகன்குமார் (Lw - 1) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Cast | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------25

**(எதிரி ஆஜர்)**

முதல் விசாரணை **Date : 29.01.2026**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம், மதுவிலக்கு அமல் பிரிவில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 07.04.2025ம் தேதி காவல் ஆய்வாளர் திரு.சங்கரபாண்டியன் அவர்களின் வாய்மொழி உத்தரவுபடி நானும் தலைமை காவலர் திரு.சின்னதம்பி ஆகியோர் மதுவிலக்கு மற்றும் குற்ற தடுப்பு நடவடிக்கையாக ரோந்து பணியில் இருந்தோம். அன்றைய தினம் காலை 09.00 மணியளவில் சேந்தமங்கலம் காவல்நிலைய எல்லைக்குட்பட்ட கோணானூர் டு கொல்லிமலை அடிவாரம் செல்லும் வழியில் இருக்கும் வெங்கட்ராமன் என்பவரது வீட்டின் அருகே கண்காணித்தபோது சுமார் 60 வயது மதிக்கத்தக்க ஒரு நபர் சந்தேகப்படும் வகையில் கையில் மண்பானையுடன் நின்று கொண்டிருந்தார். அவர்தான் ஆஜர் எதிரி. சாட்சி எதிரியை அடையாளம் காண்பித்தார்.

ஆஜர் எதிரியை நாங்கள் பிடித்து விசாரித்தபோது அவர் தன்னுடைய பெயர் ஆறுமுகம் த.பெ.கந்தசாமி என்றும் தான் சட்டத்திற்கு புறம்பாக கள் இறக்கியதாகவும் தான் வைத்திருக்கும் மண் பானையில் கள் இருப்பதாகவும் கூறினார். ஆஜர் எதிரி

ஆறுமுகம் தான் வைத்திருந்த 5 லிட்டர் கொள்ளவு உள்ள மண்பானையை ஆய்வு செய்தபோது அதில் 2 லிட்டர் அளவு கள் இருந்தது. பின்னர் ஆஜர் எதிரியுடன் நிலையம் வந்து நிலைய பாரா அலுவலில் இருந்த தலைமை காவலர் திரு.செல்வம் அவர்களிடம் தனியறிக்கையுடன் ஒப்படைத்து சம்பவம் தொடர்பாக நிலைய குற்ற எண்.110/2025 சட்டப்பிரிவு 4(1) (C) TNP Act கீழ் முதல் தகவல் அறிக்கையை தலைமை காவல் திரு.செல்வம் அவர்களால் பதிவு செய்யப்பட்டது. **(**தனியறிக்கை அ**.**சா**.**ஆ**.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)** ஆய்வாளர் வழக்கை தன்னுடைய புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டார். அதன் பின்னிட்டு காவல் ஆய்வாளர் காலை 13.15 மணிக்கு காரணம் கூறி ஆஜர் எதிரி ஆறுமுகத்தை கைது செய்தார். பின்னர் ஆய்வாளர் எதிரி ஆறுமுகத்தை விசாரித்தபோது அவர் தாமாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். பொதுஜன சாட்சிகள் யாரும் இல்லாததால் ஆய்வாளர் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை தலைமை காவலர் திரு.சின்னதம்பி மற்றும் எனது முன்னிலையில் பதிவு செய்தார்.

ஆஜர் எதிரி ஆறுமுகம் தனது ஒப்புதல் வாக்குமூலத்தில் தான் நாமக்கல் மாவட்டத்தை சேர்ந்தவர் என்றும் பனை மரத்தில் இருந்து கள்ளை இறக்கி விற்பனை செய்து வந்ததாகவும் தான் வைத்திருந்த கள்ளை விற்பனைக்கு வைத்திருந்ததாகவும் கூறினார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நான் சாட்சியாக கையொப்பம் செய்தேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையதுதான். (ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையொப்பம் மட்டும் அ**.**சா**.**ஆ**.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)** பின்னர் ஆஜர் எதிரி விற்பனைக்காக வைத்திருந்த 5 லிட்டர் கொள்ளவு உள்ள மண் பானையில் இருந்த 2 லிட்டர் கள்ளை அஜர் செய்தார். அதை ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றினார். அதில் நான் சாட்சியாக கையொப்பம் செய்தேன். பின்னர் அந்த கள்ளை அழித்தல் மகஜர் மூலம் கீழே ஊற்றி அழிக்கப்பட்டது. அழித்தல் மகஜருடன் கூடிய கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையதுதான். **(**அழித்தல் மகஜருடன் கூடிய கைப்பற்றுதல் மகஜர் அ**.**சா**.**ஆ**.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)** எதிரி கள்ளை கீழே கொட்டி அழித்தபோது எனது செல்போனில் புகைப்படம் எடுக்கப்பட்டது. **(**கள் கொட்டி அழிக்கப்பட்ட புகைப்படம் **2** அ**.**சா**.**ஆ**.4** ஆகவும்**, 63(4) (C) BSA** சான்றிதழ் அ**.**சா**.**ஆ**.5** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**.)**

காவல் ஆய்வாளர் முன்னிலையில் ஆஜர் எதிரி தான் வைத்திருந்த கள்ளை

அழித்தபோது நான் எனது செல்போனில் புகைப்படம் எடுத்தேன். வழக்கை ஆய்வாளர் தன்னுடைய புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டார்.

பின்னர் 07.04.2025ம் தேதி உதவி ஆய்வாளர் உடன் நானும் தலைமை காவலர் திரு.சின்னதம்பி சம்பவ இடம் சென்றோம். 15.30 மணிக்கு உதவி ஆய்வாளர் பொதுஜன சாட்சிகள் யாரும் இல்லாததால் எங்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தார். அதில் நான் சாட்சியாக கையொப்பம் செய்தேன். பார்வை மகஜரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையதுதான். **(**பார்வை மகஜர் அ**.**சா**.**ஆ**.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)** இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

மேற்படி சம்பவ இடமானது யாருக்கு சொந்தமான இடம் என்று விசாரணையில் தெரிந்து கொண்டோமா என்றால் தெரிந்துகொள்ளவில்லை. மேற்படி சம்பவ இடத்தில் ஆஜர் எதிரியோ அல்லது வேறு நபரோ கள் இறக்குகிறார்கள் என்று தகவல் தெரிவித்தார்களா என்றால் ரோந்துக்கு செல்லும்போது எதிரி கள் விற்பனை செய்து கொண்டிருந்தார். எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறும்போது அது அவருக்கு எதிராக பயன்படுத்தப்படகூடும் என்ற சங்கதியை காவல் ஆய்வாளர் எதிரியிடம் கூறி ஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரியல்ல. ஆய்வாளர் எதிரியிடம் தெரிவித்தார். சம்பவ இடத்திற்கு அருகில் குடியிருக்கும் வெங்கடாசலம் என்பவரை இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி சங்கதியை ஒப்புதல் வாக்குமூலத்தில் குறிப்பிட்டு கூறப்பட்டுள்ளதா என்றால் இல்லை. சம்பவ இடத்தில் எதிரியிடம் இருந்து மற்ற நபர்கள் கள்ளை வாங்கி கொண்டு சென்றார்களா என்பது பற்றி விசாரிக்கவில்லை என்றால் சரிதான். என் முன்னிலையில் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் கள்ளின் மாதிரியை கைப்பற்றப்பட்ட பொருள் கள்தானா என்று நிரூபிக்கும் பொருட்டு ஆய்விற்காக எடுக்கவில்லை என்றால் சரிதான். நானும் மற்ற சாட்சியான சின்னதம்பி ஆகியோர்தான் எதிரியை காவல்நிலையத்திற்கு அழைத்து சென்றோம் என்றால் சரிதான். எதிரியை எங்களது காவலில் வைத்துதான் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றோம் என்றால் சரிதான். மேற்படி கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் கள்ளை எங்களது முன்னிலையில் அழிக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரியிடம் இருந்து கள் கைப்பற்றப்படவில்லை என்றாலும் எதிரிக்கும் இந்தவழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் வழக்கு ஆவணங்களை காவல்நிலையத்தில் வைத்து

தயார் செய்துவிட்டு சம்பவ இடத்தில் வைத்து தயார் செய்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை: இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**